20.03.2025

அசல் வழக்கு எண்: 271/2016

வா.சா.1 சாட்சி மகாலிங்க கார்த்திக் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.23 ஆவணம் அமச்சியார் அம்மன் கோவிலுக்காக பூசாரி பெயரில் கொடுக்கப்பட்ட ரயத்துவாரி பட்டா என்றால் சரிதான். வா.சா.ஆ.23 ஆவணம் இந்த வழக்கிற்கு பொறுந்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.24 ஆவணமானது முத்துச்சாமிதேவர், கோடாங்கி சின்னன், பெரியசாமிதேவர், முத்துதேவர் மற்றும் பாண்டிதேவர் ஆகியோர்களுக்கு ரயத்துவாரி பட்டா வழங்க சொன்ன உத்தரவு என்றால் சரிதான். மேற்படி உத்தரவு சரியா அல்லது தவறா என்றால் தவறாகும். மேற்படி உத்தரவு தவறு என்று மேல்முறையீடு செய்துள்ளோம் என்றால் சரிதான். மேல்முறையீட்டில் வா.சா.ஆ24 ஆவணம் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டில் கோவில் பெயருக்கு பட்டா வழங்கசொல்லி உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பூசாரிக்கு ஊழியத்திற்காக கொடுக்கப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது. எனது பெயருக்கு ரயத்துவரி பட்டா கொடுக்கசொல்லி உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்றால் ஆவணத்தை பார்த்தால்தான் சொல்லமுடியும். மேல்முறையீட்டில் எனது பெயருக்கு 8(1) பட்டா கொடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தால் தாவா சொத்து எனக்கு சொந்தமானது என்றாலும் கோவிலுக்காக 8(2) ன் படி பட்டா கொடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தால் தாவா சொத்து கோவிலுக்கு சொந்தமானது என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்கள் அமச்சியார் அம்மன் கோவிலுக்கு

பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றாலும் எனக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்றாலும் சரியல்ல.

எனது பெயருக்கு UDRதிட்டத்தில் தனியாக உட்பிரிவு செய்து பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேல்முறையீட்டில் பிறப்பித்த உத்தரவை மறைத்து எனது பெயரில் பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. மேல்முறையீட்டில் பிறப்பித்த உத்தரவை காண்பித்து எனது பெயரில் UDRதிட்டத்தில் பட்டா பெற்றேனா என்றால் ஆமாம். நான் பெற்ற மேற்படி மேல்முறையீடு உத்தரவு எங்கு உள்ளது என்றால் என்னிடம் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். மேல்முறையீடு உத்தரவை நான் இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

அமச்சியார் அம்மன் கோவிலுக்கு செயல் அலுவலர் இருக்கிறார் என்றால் சரிதான். மேற்படி செயல் அலுவலர் எனது பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை எதிர்த்து கோவிலுக்கான சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலரிடம் ரத்து செய்ய மனு செய்து விசாரணைக்கு பிறகு எனது பெயரில் உள்ள பட்டா ரத்து செய்யப்பட்டு கோவில் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை எதிர்த்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது பெயருக்கு மீண்டும் பட்டா வேண்டும் என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருப்பது தவறு என்றாலும் நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

வா.சா.ஆ. 25 ஆவணத்தில் மேல்முறையீட்டு உத்தரவு நகல் வேண்டி மனு செய்ததாக விபரங்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து அமச்சியார் அம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல.